ரிஸ்ய சிருங்கர்

தமிழ் நாடு டாக்கீஸ் தயாரிப்பு

ஜெமினி ரிலீஸ்

ஸப்-டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் :

நாராயணன் & கம்பெனி,

மவுண்ட் ரோட், மதராஸ்.

ரிஷ்ய சிருங்கர்

நடிகர்கள்

பாலசந்திரன்	....	பால ரிஷ்ய சிருங்கர்
ஆர். ரஞ்சன் பி. ஏ.	....	ரிஷ்ய சிருங்கர்
ஜி. பட்டு அய்யர்	....	விபாண்டகர்
டி. ஈ. கிருஷ்ணமாச்சாரியர்	...	ரோமபாத ராஜன்
கே. என். ராமமூர்த்தி அய்யர்	....	கௌதமர்
ஆர். கே. ராமசாமி,	....	சுதேவர்
ஆர். பி. யக்ஞேஸ்வர அய்யர்	....	பௌத்தாயனர்
எம். எஸ். முருகேசம்	....	மாரீசன்
டி. வி. ஸேதுராமன்	...	சுபாகு

நடிகைகள்

ஸ்ரீமதி வசுந்தரா	....	மாயா
குமாரி முரளி	....	சாந்தா
குமாரி ருக்மணி	....	பத்மினி
ஸ்ரீமதி வி. எம். பங்கஜம்	....	ஊர்வசி
,, கே. என். கமலம்	....	சுதேவி

மற்றும்

எம். வி. சுலோசனா, ஆர். கௌஸல்யா, வரலக்ஷ்மி,
கே. எஸ். வனஜாக்ஷி, எம். எஸ். யோகாம்பாள்,
டி. கே. கோகிலா, ஏ. வி. சக்குபாய்,
எம். எஸ். சாந்தா, ராஜா, பாலா,
செல்லம்மாள், ஏ. கே. காந்தாமணி
முதலியோர்.

ரிஷ்ய சிருங்கர்

தமிழ் புராணப் படம்

●

GANAPATHI S.
DEALERS IN
CINEMA PICTURES & SONG BOOKS,
Side to Tower Talkies,
TANJORE.

கதைச் சுருக்கம்.

நீருண்ட மேகங்கள் வானத்தைக் கவிந்து கொண்டன. இடி மின்னல்களுடன் அகோராத்திரம் பிரமாதமான மழை பொழிகிறது. மழை என்றாலே உடனே ரிஷ்ய சிருங்கரின் ஞாபகந்தான் வருகிறது. அவரது வளர்ப்புத் தந்தையான விபாண்டகருக்குத் துக்கம் குமுறிக் கொண்டு கிளம்புகிறது. அவரைப் பிரிந்த சோகத்துடன் மனக் கண்ணின் முன் பல பழைய சம்பவங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. ரிஷ்ய சிருங்கரின் பிறப்பு வளர்ப்பை யெல்லாம் எண்ணிப் பார்க்கிறார்.—

பௌத்சாயனர் என்பவருக்கும் அவரது குமாரன் சுதேவருக்கும் பாகம் ஆகிறது. தந்தையும் மகனும் பிரிந்து போகின்றனர். அந்த சமயத்திலே முனிவர் விபாண்டகருக்கும் அவரது நண்பரான கௌதம ரிஷிக்கும் இந்த பாகப் பிரிவினை சம்பந்தமாகப் பேச்சு வார்த்தைகள் நடக்கின்றன. கடைசியில் அது ஒரு வாக்கு வாதமாக முடிகிறது.

"வளர்க்கிறபடி பிள்ளையை வளர்த்து வந்திருந்தால், அவன் இப்படித் தந்தையிடம் நடந்து கொள்வனா?—பிரிந்து போகத்தான் மனம் துணிவானா?— என்று கேட்கிறார் விபாண்டகர்.

கௌதமர் அதை ஒப்புக்கொள்ளாதவராக, "உமக்கு ஒரு பிள்ளை இருக்க வேண்டும்; அவனை நீர் வளர்க்கும் வழியைப் பார்க்க வேண்டும்!" என்றார்.

"வாஸ்தவந்தான்! என்னிடம் ஒரு பிள்ளை இருந்தால் அவனை நான் வளர்க்கும் விதம் வேறு விதமாகத்தான் இருக்கும் என்று சளைக்காமல் பதில் கொடுக்கிறார் விபாண்டகர்.

காட்டிலே தன்னந் தனியே ஒரு குழந்தையைக் காண்கிறார் விபாண்டகர். அதை எடுத்து, ரிஷ்யன் என்று நாமகரணமிட்டு, வளர்க்கிறார் முனிபுங்கவர். குழந்தையின் முகத்திலே திவ்ய தேஜஸும், உள்ளங்காலில் க்ஷேம சக்கரத்தையும் அவர் கவனிக்கிறார். இந்த விசேஷத்தினால் அந்தக் குழந்தை போகுமிடம் எல்லாம் செல்வமும் சுபிக்ஷமும் குடிபுகும் என்று கூறுகிறார்கள் விபாண்டகர் அந்தக் குழந்தையை வெகு ஜாக்கிரதையாக—தமது வழியில்--மனிதர் வாடையும் படாமல் வளர்க்கலானார்.

ரிஸ்யனுக்கு வயது ஆகிக்கொண்டு வருகிறது. அதோடு விபாண்டகரும் ஜரூராகி வருகிறார். கண்டிப்பும் அதிகமாகச் செய்து வருகிறார். தன் வளர்ப்புத் தந்தையைத் தவிர வேறு யாரையும் ரிஸ்யன் அறியவில்லை. விருந்துகள், ஆடை ஆபரணங்கள், ஸ்திரீ புருஷர்களின் பேதம் ஒன்றும் அவனுக்குத் தெரியாது. தவத்திலும், ஞானத்திலும், அவன் சிறந்து ஒப்பற்று விளங்குகிறான். விபாண்டகரே அவனுக்குத் தந்தையும், தாயும், ஆசிரியரும், தெய்வமுங் கூட. வேறு ஒன்றும் அவனுக்குத் தெரியவும் தெரியாது, லக்ஷ்யமுமில்லை.

அங்க தேசத்தை ரோமபாதன் என்ற அரசன் ஆண்டு வருகிறான். ஒரு சமயம் அவன் கோபத்துக்கு இடமளித்து, ஒரு உத்தமரான அந்தணரைத் துன்பத்துக் குள்ளாக்குகிறான். அவரும் சினங் கொண்டு, அங்க தேசம் சுபிக்ஷ மற்றுப்போகச் சபிக்கிறார். சாபத்தின் பலன் உடனே தெரிகிறது. நாட்டிற்கு க்ஷேமத்தை அளிக்க வகையறியாது பரதவித்துக் கடைசியில் ரிஸ்யருடைய பெருமையைக் கேள்விப்படுகிறான். அவரை அழைத்து வரப் பல பிராமணர்களை அனுப்புகிறான்.

ஆனால் ரிஸ்யர் வருவது அவ்வளவு சுலபமாக ஆகக்கூடிய காரியம் அல்லவென்பதை உடனே அரசன் கண்டு கொண்டான். சர்வ ஜாக்கிரதையுடன் போற்றி வளர்த்துவரும் விபாண்டகர், எல்லாரையும் துரத்தியடிக்கிறார். இம்மாதிரியான வகையில் ரிஸ்யரைக் கொண்டு வருவது இயலாதென்று கண்டு, மாயா என்ற அரண்மனை தாசிப்பெண், மற்றும் சில பெண்களுடன் செல்லுகிறாள்.

ரிஸ்யருக்கு முன் அவள் செய்யும் சாகஸங்கள் பலன் பெறுகின்றன. மாயாவின் வலையில் ரிஸ்யர் சிக்கிக் கொள்கிறார். விபாண்டகர் ஆசிரமத்தில் இல்லாத சமயத்தில் அவர் மாயாவுடன் அங்க தேசத்துக்கு ஓடி விடுகிறார்.

ரிஸ்யர் அங்க நாட்டில் கால் வைத்தது தான் தாமதம்! வானத்தில் மேகங்கள் கூடுகின்றன. பெருமழை வர்ஷிக்கிறது. அங்க தேசத்தைப் பிடித்திருக்கும் பீடை ஓடிப்போய் விடுகிறது!

அங்க மன்னனின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. தனது மகள் சாந்தாவை ரிஸ்யருக்கு மணம் செய்விக்க, ரிஸ்யரும் மனைவியுடன் ஆனந்தமாக இருக்கிறார்

துறவியும் ஞானியும் கூட மாயை வசப்படாமல் தப்புவது துர்லபம் என்பதை விபாண்டகர் உணர்கிறார். புத்ர வாத்ஸல்யம் அவரை ஆட்கொண்டு இழுக்கிறது. தமது புதல்வன் ரிஸ்யன் ஆனந்தமாக வாழ்வதைக் கண்டு உள்ளம் பூரிக்கிறார்.

ரிஷ்ய சிருங்கர்

பாட்டுகள்

பல்லவி

1. ஊர்வசி புண்ய ஸ்வரூபனே வா
புனிதஞன பூஜிதனே வா (புண்ய)

அனுபல்லவி

தண்ணிய சோலை தங்கிடுவோமே
கண்ணியமாகவு நா......மே
எண்ணிலா லீலைகள் செய்திடலாமே (புண்ய)

சரணம்

யோகமிதே போகமிதே
போக சாரமே
ஏகமன மாகவேனை
ஏற்றுக்கொள்வாயே
மகா ...... மோகங்கொண்டேனிங்கே
வேகமுடன் வா (புண்ய)

பல்லவி

2. பால ரிஷ்யன் சுப்ரஜோதி சூர்யனிதோ
உதய தருணம் ஓஹோ ஹோ (சுப்ர)

அனுபல்லவி

அப்ரமேயன் அவன் வரவால்
அகிலமெங்கும் ஆனந்தம்
பறவைகள் பாடவும் பல
நிறமாமலர் சோபையே
இருளும் நீங்க எங்குமே ஒளி
இன்பந்தரும் இங்கேதான் (சுப்ர)

3. பால ரிஷ்ய சிருங்கர்

பல்லவி

என்னருமை மானே உன்னுடனே நானே
விளையாடுவேனே இங்கு வா வா
இங்கு வா வா இங்கு வா வா. (என்னருமை)

அனுபல்லவி

அஞ்சியோடுவானே சாது நீயேதானே
அருகம்புல் தாரேன் அஞ்சிடாதே
அஞ்சிடாதே அஞ்சிடாதே (என்னருமை)

4. ## பால ரிஸ்ய சிருங்கர்

பாபாபஹாரி துரிதாரி தரங்கதாரி
சைலப்ரசாரி கிரிராஜ குஹாவிஹாரி
ஜங்காரகாரி ஹரிபாத ரஜோபஹாரி
காம்கம் புனாது ஸததம் சுபகாரி வாரி.

5. ## பால ரிஸ்ய சிருங்கர்

பல்லவி

இதுவுமென் புண்யமே (இது)

அனுபல்லவி

பிதுர் சேவைதான்
எதிலும் மேலாம் (இது)

சரணம்

பூஜைக்குகந்த நல
பூவொடு காய் கனி
புதிய கிழங்கு வகை
பறித்திங்கேகும் (இது)

6. ## மாயா

அந்த நாள் முதலாக — அரண்மனைத் தாதியாக
அண்டிப்பிழைத்தோமடி — சகியே
அருமையாய் வாழ்ந்தோமடி

ஆகாத காலம் வர — அரசர் வறுமையுற
அடிமைகளானோமடி — சகியே
ஆறாத்துயரமடி

வீதியில் மனைவியை — விற்றானரிச்சந்திரன்
சேதியது போலவே — சகியே
சேர்ந்த விதி வசமே.

7. கோரஸ்

பல்லவி

நேற்றந்தி நேரத்திலே நீராடும் கரைதனிலே
நெருங்கி உம்மை ஜாடை காட்டி
அழைத்தவள் யார் ஸ்வாமி (நேற்றந்தி)

அனுபல்லவி

நெற்றி மாமயிலேறுங் கந்தா
நீர் அவளும் எதிர் மொழியாய்
நிற்க மையலிலே ஸ்வாமி சொக்கையிலே
பக்கத்திலே யிருந்தேன் ஸ்வாமி (நேற்றந்தி)

சரணம்

முன்னாளில் என்னிடத்தில் சொந்தம்போல் கிட்டவந்து
முத்து முத்தாய் வார்த்தையாடி மோகமதனைத் தந்து
மன்னவா உன் நினைவு கண்டு அன்னங்கண்டொரு மாதமுண்டு
வாருமையா என் துரையே தீருமே எந்தன் கவலை (நேற்று)

பல்லவி

8. மாயா ஆனந்தமே உன் காட்சி
எனக்கன்பு கொண்டருள் மாட்சி (ஆனந்தமே)

அனுபல்லவி

ஸ்ரீஹரியே நரஹரியே
என்னைக் காக்க இப்போதே (ஆனந்தமே)

சரணம்

ஏழைபங்கா எனது முன்னாலே
நீ வந்தாயென் சொல்வேன்
யாரறிவாரே உன் திருவருளோ என்தேவா (ஆனந்தமே)

9. மாயா பூமியினிற் பூவையராய்
பிறந்ததனால் பலனேதே
புத்தி சக்தி வீரமெல்லாம்
எதெமக்கே கிடையாதோ
நாரியரே நாமுமிந்த
காரியமே செய்யாது
நடுங்கிடப் போகுமோ — நம்மை
நானிலம் நகைக் காதோ இனி (பூமி)

10. **கோரஸ்**

கூடிவிளையாடிடுவோம் பாங்கியரே
கூட்டத்திலொருவர் முன்னே இங்கு வாரீர்
ஓடிப் பிடித்திட அவர் கண்ணைக் கட்டி
ஒருவர் பின் ஒருவர் ஒளிந்து குட்டி
கையோடு கை கோர்த்து ஒரு வட்டமாக
கவிழ்ந்து நிமிர்ந்து சுற்றி சட்டமாக
பையவே சுழன்று நல்ல பம்பரம் போலே
பைங்கிளிகளே விரைந்து ஆடுவமே.

11. **ரிஸ்ய சிருங்கர்**

நாதஸ்வரூபமே லோகம் — ஜெகன்
சாத்வீகமே நிறையும் இந்த
போத சிதானந்த யோகம் (நாத)
பூதபௌதிக சரா சரங்களே
பூஜித நாராயணனுருவே
வேதமோடு எவை என்றும்
தேடிக் காணவிலாத (நாத)

12. **மாயா**

வேலையே இல்லையே
வேறேதும் இல்லையே (வேலை)

கண்ணி

மதனனைப் பெற்ற திரு
மாவிடத்து மனம் மாறு
மனோரதம் நிறைந்த
நாம பஜன மதனோடு
சதா சுகானந்தமாய்
சாது ஜனங்கள் சகவாசம் (வேலை)

13. **மாயா**

பல்லவி

நானே பாக்யவதி — நளினியே
நலசுகவாழ்வீதாமே — ஜகமேல் (நானே)

அநுபல்லவி

நானிலமேல் நிகரே யாரே
என்னாளும் இன்பமே யாவும் இனிமேல்
மேவி நல்யோகம் மேவிடுமாமே (நானே)

14. மாயா தாபவியேன் வரக் காண்கிலேன் நானே
அபராதியாகினான் வீணே
அபலையான் யோசியாதேனே
அஞ்சாது வந்தேன் என் செய்குவேனே

திருப்புகழ்ச் சந்தம்

15. மாயா இங்கு வருக இனிதே வருக இனி
தங்க வருக தபயோக நிதியே நீ
எங்களுடைய இறையே வருக நீ இதுவேளை
உங்கள் சரணமதுவே படவுகில
மெங்கும் மிக புனிதமானதது எனில்
உங்கள் பெருமையெவரே உறை செய்பவர் உலகோரில்

16. ரிஸ்யர்

மாயா
இங்கு நாரணரூபமே நாமுமாகும்
அவனே வியாபகனே — ஆனல்
அதிசயமேதிதிலே.

ரிஸ்யன்
ஆரணமாமுனி காணுங்காட்சி
காணக் கண்கோடி போதாதே
கருணாசாகரனே — அடியாருக்
கருளும் ஸ்ரீதரனே.

மாயா
தீன தயாபர தேவரீர் வாரும்
ஆனந்தமே கொள் ஆரமுதாகும்
வானுலகோர்க்குமிதே கிட்டாதே
வாங்கியுட்கொள்வீரே.

ரிஸ்யன்
பானமுமேயதைத்தான் தருவீரே

மாயா
ஞானமுனிப் பாருமே — இதோ
ஞானமுனிப் பாருமே இதோ இங்கு

மாயா-ரிஸ்யன்
நாரண ரூபமே நாமுமாகும்
அவனே வியாபகனே — ஆனல்
அதிசயமேதிதிலே.

17. மாயா எனைத் தயை புரிந்
திடர்ப் படாதும
திடத்தில் காத்திடுவீர்
மனத்தினில் மகிழ்வுறத்தினம் எனை
வரச்சொலும் இனியே
கானுங்களோடு மிங்கே

நலமோடென்னாளும்
நடந்து கொள்வேனே
எனக்கு தாருமே உத்தரம்
பாரும் எனது நிறம். (எனை)

18. **ரிஷ்யன்** என்னாளும்
மனமேதோ
மறவாதே
யான் என் செய்வேன்
இன்பாரும் வைகுண்டவாவிகளே
எனது தந்தை எற்றிடாதேனோ
என்னையும் மறுத்தாறே எதிது
நானவர் தந்த தீங்கனிகள்
தானருந்தினேன் ..... ஆஹா

19. **ரிஷ்ய சிருங்கர் — மாயா**

ரிஷ்யன் : யோகிகளே நீர் யாதிது செய்வீர்
என்னோடுரைப்பீர்
இந்த மாதிரி மேலே சென்று பின்
தரையினில் விழுந்து செய்திடும் சப்தம்
டப் டப் டப் டப்

மாயா : போகப் போகத்தான் தெரியும் வாரும்
ஸ்வாமி பாரும் எல்லாமுங்கட்கே

ரிஷயன் : சுகமாய் பூமியில் சேரும்போதே
ஜம் ஜம் எனவே துள்ளி எழுமிது
மான் விழியும் தேன் மொழியும்
காணவெ ஆனந்தம்

மாயா : சாந்தமதே உருவாய் சதா சுபம்
சார்ந்திடுமே வருவாய்

ரிஷ்யன் : கலாப மயிலே

மாரா : எல்லாமுன் உறவெ

ரிஷ்யன் : சல்லாபக் குயிலே

மாயா : உல்லாசமிதுவே

இருவரும் : எங்குமே எதிலும் தங்கிடுமொருவன்
மங்காத மகிமை
இங்கு காணுவோம் பொங்கும் புனிதமே
புங்கவனருளே பொருந்தும் நிதம்.

சுபம்.

Padma Printing Works, 30, Broadway, Madras.

PAKSHI RAJA'S FORTHCOMING ATTRACTIONS:

இழந்த காதல்

and

சந்திரஹரி

N. S. கிருஷ்ணன், T. A. மதுரம்

கோஷ்டியார் நடித்தது.

P. U. சின்னப்பா, N. S. கிருஷ்ணன்

T. V. குமுதினி, T. A. மதுரம், A. சகுந்தலா

முதலியவர்கள் நடித்த

சாயா

சிறந்த சரித்திர சம்மந்தமான தமிழ் படம்

பக்ஷிராஜா பிலிம்ஸ் வெளியீடு:

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்:

நாராயணன் & கம்பெனி

மவுண்ட் ரோட், மதராஸ்.